ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1796/14 - 2013 පෙබරවාරි 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.02.07
*1796/14 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

2013 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல. : 4/3/9/2011/டபிள்யூஎஸ்/214.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : கேரீஎஸ்/ஏஜீஏ/காணி/அத்/2011/01.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.02.05.

அட்டவணை

1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்: பிரதேச செயலாளர், ஊர்காவற்துறை.

2. காணியின் விபரம் : வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில், இல. ஜே/ 37, அனலைதீவு வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், அனலைதீவு கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2012.04.27 ஆந் திகதிய வைஏ/கேவைரீ/2012/77 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு ''ஏ'' எனக் காட்டப்பட்ட சுமார் 0.0500 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

**01. துண்டு ''ஏ'' - அருள்மிகு ஸ்ரீ சங்கரநாதர் மகா கணபதிப் பிள்ளையார் கோயில் காணி - விஸ்தீரணம் : சுமார் 0.0500 ஹெக்டயார்**

வடக்கு : சண்முகம் ராஜரத்தினம் உரிமை கோரும் பனை வளவுத் தோட்டம் ; கிழக்கு : அருள்மிகு ஸ்ரீ சங்கரநாதர் மகா கணபதிப் பிள்ளையார் கோயில் காணி மற்றும் அருள்மிகு ஸ்ரீ சங்கரநாதர் மகா கணபதிப்பிள்ளையார் கோயில் உரிமை கோரும் தோட்டம் ; தெற்கு : வீடுகளிலிருந்து துறையடிக்குச் செல்லும் பிரதேச சபை வீதி ; மேற்கு : பொன்னம்பலம் மார்க்கண்டு உரிமை கோரும் பனை வளவுத் தோட்டம்.

02-731